International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நற்றிணையில் வகைமை நோக்கில் உள்ளுறை உவமம்

**த. நந்தினிப்பிரியா**
பதிவு எண்:BDU2210632780197; BDU/PhD/22/0258 Dated: 19.05.2022, முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த)
பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது

**முனைவர் சா. பெரியநாயகி**
ஆய்வு நெறியாளர், இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை, குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக்கல்லூரி (த)
தஞ்சாவூர்-613007

**ஆய்வுச் சுருக்கம்**

மொழியின் சிறப்பும் பயனும் ஆக்கமும் அம்மொழியை ஆளக்கூடிய சமுதாயத்தின் செயல்பாட்டோடு தொடர்புடையனவாகும். எண்ணற்ற மொழிகள் காலச்சக்கரத்தின் சுழற்ச்சியில் சிக்குண்டு மடிந்தும் சிதைந்தும் போயின. இத்தகு சூழலில் தன்னிகரற்றதாய் வாழும் மொழியாய் தமிழ் மொழி திகழ்கிறது. இத்தகைய தனித்தன்மையுடைய மொழிக்கு பெருமைச் சேர்க்கும் அணிகலனாய் தொல்காப்பியமும், பண்டைய இலக்கியமும் விளங்குகின்றன. இவற்றில் தொல்காப்பியர் கூறும் உவமை வகைகளை, நற்றிணைப் பாடல்களோடு பொருத்திக் காணும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**முதன்மைச் சொற்கள்**

உள்ளுறை, உத்தி, கோடு, நுவ்வை, பிணி, சுணங்கு, உவமம்

**கருதுகோள்**

தமிழில் தோன்றிய இலக்கியங்களில் சங்க இலக்கியம் ஒன்று. தமிழ் இலக்கியத்தில் இலக்கிய கொள்கையை உருவாக்கியவர் தொல்காப்பியர். அந்த வகையில் நற்றிணைப் பாடல்களில் பயின்று வந்துள்ள குறிப்புப்பொருளான உள்ளுறை பற்றியும் அதன் வகைகள் பற்றியும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வின் முதன்மை நூல்களாகத் தொல்காப்பியம் மற்றும் நற்றிணை ஆகும். சார்பு நூல்களாக உள்ளுறை தொடர்புடைய நூல்கள் மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வின் மூலம் தொல்காப்பியரால் சுட்டப்படும் குறிப்புப்பொருளின் ஒன்றான உள்ளுறையை வகைமை நோக்கில் காண்பதாக ஆய்வின் கருதுகோளாக அமைகிறது.

**முன்னுரை**

சங்க இலக்கியமும் தொல்காப்பியமும் பல்லாண்டு காலமாக வாசிக்கப்பட்டு வரும் செவ்விலக்கியங்கள் ஆகும். அவற்றுள் நற்றிணையில் மனித அக உணர்வுகளை இயற்கையோடு இரண்டற கலந்து கூறப்படுகின்றன. அகப்பாடல்களில் எண்ணங்களையும் உணர்வுகளை நேரடியாகச் சொல்லிவிடாமல் இலைமறைக்காயாய் இயற்கையோடு வெளிப்படுத்தினர். தலைவன் தலைவிடையே ஏற்படும் அக உணர்வுகளை சங்கப்புலவர்கள் குறிப்புப் பொருளால் உணர்த்த உள்ளுறை இறைச்சி என்னும் உத்தியைக் கையாண்டு உள்ளனர். அவற்றில் உள்ளுறை பற்றியும் அவற்றின் வகைகளை விளக்குவதாய் இவ்வாய்வு அமைகிறது.

**மொழி**

மொழி என்பது நம்மை அடையாளப்படுத்தும் முகவரியாகத் திகழ்கிறது. ஆகவேதான் பேசுதல் என்பது ஒரு கலையாகக் கருதப்படுகிறது. இடம், பொருள், காலம் ஆகியவை மொழியின் எல்லையை வரையறுக்கும் கருவிகளாகும். மொழியைக் கையாளும் திறம் படைத்தோரே சந்து செய்விக்கவும் தூது செல்லவும் தகுதியுடையோராய் விளங்கினர். இத்தகைய மொழியை வெளிப்படையாக மட்டுமின்றிக் குறிப்பாக மறைபொருளாக பேசுமிடங்களும் உண்டு. ஏனெனில் மொழியால் ஒரு கருத்தை வெளிப்படுத்தவும் முடியும் மறைக்கவும் முடியும்.

**குறிப்புப் பொருள்**

ஆர்வத்தையும், ரசனையையும் தூண்டும் வலிமை வெளிப்படையானவைகளுக்கு இல்லை. ஆகவேதான் விடைதெரியாத புதிர்கள், விடுகதை களைக் கேட்போர் அதீதஈடுபாடு கொள்கின்றனர் சில செய்திகள் மூடி மறைக்கப்படும் போதே அதன்மீது ஈடுபாடு கூடுகின்றது. பேச்சு மொழியைப் போன்றே இலக்கியங்களிலும் இலக்கிய ரசனைக்காகவும் கருத்துப் புலப் பாட்டுத் தேவைக்காகவும் குறிப்புப் பொருள் கையாளப்பட்டு வருகின்றது. அத்தகைய குறிப்புப் பொருளின் வகைகளாக உள்ளுறையும் இறைச்சி யும் திகழ்கின்றன. இவை இரண்டும் ஒன்றுபோல தோன்றும் வெவ்வேறானவை ஆகும். இரண்டுமே மறைவான பொருளொன்றை உணர்த்தும்.

**உவமை விளக்கம்**

ஏதேனும் ஒப்புமை அடிப்படையில் இருவேறுபட்ட பொருள்களைச் சேர்த்துப் பார்ப்பதை உவமை எனலாம். இதனை ஆங்கிலத்தில் Simile என்பர். உவமையே அணிவகைகள் அனைத்தும் தோன்று வதற்கு மூல காரணமாகும்.

பண்டைய தமிழ் இலக்கியப்பாடல்களுள் ஆசிரியர் பெயர் அறியமுடியாதவைகளுக்கு அப்பாடல்களில் பயின்று வந்துள்ள உவமையையே அடிப்படை யாகக் கொண்டு பெயர் உருவாக்கியுள்ளதைக் காண்பதன் வழி உவமையின் சிறப்பினை நன்கு அறியலாம்.

**தேய்புரிப் பழங் கயிற்றனார்**[1] (நற்–284)
**தனிமகனார்**[2] (நற்–152)

**உவமை வகைகள்**

**உவமையின் வகைகளை,**

உவமை

ஏனை உவமம் உள்ளுறை உவமம்

என்று உவமைஇரண்டு வகைப்படும் 'ஏனை உவமம்' என்பது பொது உவமத்தினைக்குறிக்கும். இவ்விரண்டு வகையுள் உள்ளுறை உவமத்தையே தொல்காப்பியம் முதன்மையாய் கருதியுள்ளதைக் கீழ்வரும் நூற்பா மூலம் விளக்கப்படுகிறது.

**உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்**
**தள்ளாது ஆகுந் திணையுணர் வகையே**[3]
(தொல்.பொருள்.அகத்.49)

தொல்காப்பியம் இவ்வாறு உள்ளுறை உவமையை முதலில் கூறியுள்ளதற்கான காரணத்தை "அகத் திணைக்கே சிறப்புரிமையுடைமையின் உள்ளுறை உவமையை முதலில் கூறி மற்றதை ஏனை உவமம் எனச் சார்பு நிலையில் தமிழண்ணல் கூறுகிறார்" [4]

**உள்ளுறை உவமம்**

**தொல்காப்பியம் உள்ளுறை உவமத்தை**

**"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிக என**
**உள்ளறுத்து இறுவதை உள்ளுறை உவமம்"**[5]
(தொல்.பொருள். அகத்-51).

என்று வரையறுத்துள்ளது ஒரு பாடலில் இடம்பெறும் கருப்பொருள்களில் வாயிலாய் புலப்படும் வெளிப்படைப் பொருளோடு தொடர்புடைய உவமேயப் பொருளையும் கொண்டிருப்பது என்று விளக்கப்படுகிறது.

நச்சினார்க்கினியர் "யான் புலப்படக் கூறுகின்ற இவ்வுமத்தோடே புலம்படக் கூறாத உவமிக்கப் படும் பொருள் ஒத்து முடிவதாகவென்று புலவன் தன் உள்ளத்தே கருதித்தான் அங்ஙனம் கருதும் மாத்திரையேயன்றியும் கேட்டோர் மனத்தின் கண்ணும் அவ்வாறே நிகழ்விடத்து அங்ஙனம் உணர்த்துவதற்கு உறுப்பாகிய சொல்லெல்லாம் நிறையக் கொண்டு முடிவது உள்ளுறையுவமம் என்றவாறு"[6] என்று விளக்குகிறார்.

**உள்ளுறை உவமம் அமையும் பாங்கு**

உள்ளுறை உவமத்தில் உவமேயத்தை உய்த்துணர வேண்டிய நிலையே உள்ளது அது வெளிப்படையாக அமைந்திருக்காது. உவம உருபுகளும் வெளிப்படையாகப் பயின்று வராது. சிறுபான்மையாக உவம உருபுகள் வருதலும் உண்டு. உவமை மட்டுமே வெளிப்படையாய் காணப்படும். இவ்உள்ளுறை தெய்வத்தைத் தவிர்த்து ஏனைய கருது பொருள்களான உணவு, விலங்கு, மரம், பறவை ஆகியவற்றை நிலைக்களமாகக் கொண்டு தோன்றும் என்று தொல்காப்பியம் எடுத்துரைப்பதை,

**உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலம் எனக்**
**கொள்ளும் என்ப குறி அறிந்தோரே"**[7]
(தொல்.பொருள்.அகத்-50)

என்ற நூற்பா மூலம் அறியப்படுகிறது.

**உள்ளுறை உவமம் வகைகள்**

**"உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்**
**கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே"**[8]
(தொல்.பொருள்.பொருளி-238)

ஆகியன உள்ளுறையின் ஐவகை என இளம்பூரணர் கூறியுள்ளார்.

**உடனுறை உவமம்**

உள்ளுறையின் வகையில் முதலாவதாய் இடம்பெற்றுள்ளது உடன் உறையும் ஒன்றைச் சொல்லி அதன் மூலம் வேறொரு பொருளையும் விளங்கச் செய்வது எனலாம். இது இறைச்சி போன்றதாயினும் இறைச்சி அல்ல என்றும் கூறப்படுகின்றது.

ஆயினும் ஆய்வுலகில் இதற்கு முரண்பட்ட கருத்துக்களும் நிலவுவதைக் காணலாம். ஏனெனில் "உடனுறையை இறைச்சி என்று ந.சுப்புரெட்டியார் கூறியுள்ளார்.[9] இக்கருத்திற்குக் கதிர் மகாதேவனும் உடன்பட்டுள்ளமையைக் முடிகின்றது.[10] இவ்வுள்ளுறைக்கு இளம்பூரணர் நற்றிணை பாடலைச் சான்றாகக் காட்டியுள்ளார்.

**விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி**
**மறந்தனம் துறந்த காழ்முனை அகைய**
**நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப**
**நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகுமென்று**

**…….. துறை கெழு கொண்க நீ நல்கின்**

**நிறைபடு நீழல் பிறவுமாருளவே”**[11] (நற்-172)

சிறுபருவம் முதலே தலைவியொடு அன்னையால் வளர்க்கப்பட்ட புன்னை மரமும் தங்கை முறையாவதால் அம்மரத்தின் நிழலில் சந்திப்பது முறையல்ல மேலும் அன்னை அடிக்கடி இவ்விடத்தே வருவாள் என்பதன் மூலம் தலைவியோடு ஓரிடத்தே உறைகின்ற புன்னை யின் மூலம் பகற்குறியை மறுப்பதேடு வரைவு கடாவும் வேறொரு பொருள் தோன்றுவதையும் காணலாம். ஆகவே தான் இப்பாடல் உடனுறை உள்ளுறைக்குச் சான்றாக அமைகிறது.

**உவம உள்ளுறை**

உவமம், உவமப்போலி என்று தொல்காப்பியம் குறிப்பது உள்ளுறை உவமத்தையே ஆகும். இதனை உவமையைச் சொல்வதன் மூலம் உவமிக்கப்படும் பொருளும் தோன்றுவது என்று விளக்கலாம். ஒரு பாடலில் முழுமையாக பொருள் புரிதலுக்கு அடிப்படையாய் விளங்குகிறது.

நற்றிணையில் உள்ளுறையின் ஐந்து வகையில் இவ்வுள்ளுறை உவமே 98 பாடல்களில் பயின்று வந்துள்ளது.

தலைவி இற் செறிக்கப்பட்ட துன்ப வேளையில் தலைவனை வரைவு கடாவுகின்ற நிலையை,

**தோடமை தூவித் தடந்தாள் நாரை**

**நலனுனப் பட்ட நல்கூர் பேடை**

**கழிபெயர் மருங்கின் சிறுமீன் உண்ணாது**

**கழிபெயர் மருங்கின் சிறுமீன் உண்ணாது**

**கைதையம் படுசினைப் புலம்பொடு வதியும்.**

**…… காணவும் இயைந்தனறு மன்னே நாணி**

**நள்ளென் யாமத்துங் கண்படை பெறே என்** [12]

(நற்-178)

நாரையால் நலன் நுகரப்பட்ட பேடை இரையுண்ணாது துன்பப்பட்டு மரக்கிளையில் வருத்தத்தில் தங்கியிருக்கும் என்ற உவமை வாயிலாகத் தலைவன் இன்பம் நுகரப்பட்ட தலைவி உணவு கொள்ளாது மலையின் கண்ணே துன்பத்தோடு தங்கியுள்ளான் என்ற உட்பொருள் அறியப்படுகின்றது.

**வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்**

**குறைபடுந்தேன் வேட்டும் குறுகும் – நிறை மதுச்சேர்ந்து**

**உண்டாடும் தன்முகத்தே செல்வி உடையதோர்**

**வண்டா மரைப்பிரிந்த வண்டு**[13]

(தொல்.பொருள்.பொருளியல், ப-329)

தாமரையில் தேனுண்ட சுரும்பு வண்டு தேன்போதவில்லை என்று காவி என்னும் செங்குவளை மலரிலுள்ள தேனை உண்ண விரும்பிச் செல்லும் இது பாடலில் உள்ள செய்தி தலைவன் தலைவியின் இன்பம் போதவில்லை என்று பரத்தையிடம் செல்கிறான். இஃது உள்ளே உறையும் வேறுபொருள் கொண்டதால் உவம உள்ளுறை ஆயிற்று.

**சுட்டு உள்ளுறை**

ஒரு பொருளைப் பற்றிக் கூறவேண்டிய கருத்துக்களை வேறொரு பொருளைச் சுட்டிக் கூறி உணர்த்தல் சுட்டு உள்ளுறை எனப்படும். அதாவது மலை, அருவி, மேகம் போன்ற இயற்கைப் பொருள்களைச் சுட்டிக் கூறுவதன் மூலம் தலைவனைப் பற்றிய செய்திகளை உள்ளடக்கிக் கூறுவதை,

**நெடுநீர் அருவிய கடும்பாட்டு ஆங்கன்**

**பிணிமுதல் அரைய பெருங்கல் வாழை**

**கொழுமுதல் அய்கனி மந்தி கவரும்**

**நன்மலை நாடனை நயவாய் யாமவள்**

**……… தோடிடங் கோடாய் கிளந்து**

**நீடினை விளையோ வாழிய தினையே**[14] (நற்–251)

என்ற ஒரு பாடல் மட்டுமே நற்றிணையில் சுட்டு உள்ளுறைக்குச் சான்றாகத் திகழ்கிறது.

“தினையே! தலைவனிடம் கொண்ட விருப்பத்தால் தினைக் காவலுக்கு வந்துற்றதால் மேனி நலம் கெடவே தாய் வெறியாட்டு நிகழ்ந்த வழிவகை செய்யும்போது என்னால் நின்னைக் காக்க இயலாது போகும். ஆகவே காலம் தாழ்த்தித் தினைக் கதிர்களை விளைவிப்பாயாக வாழியர் என்று தினையைப் பார்த்துக் கூறுவதாய் இப்பாடல் அமைந்துள்ளது.

அதாவது தலைவி இதுகாறும் பகற்குறிக்கு வழிவகை செய்து நீடிக்க களவு வாழ்க்கையை இனித்தொடர வாய்ப்பின்றி இவ்வயின் செறிக்கப்பட்டு வெறியெடுக்கப்படும்போது களவு வெளிப்பட்டுவிடும் என்று சிறைப்புறமாக நின்ற தலைவனைத் தினைமேல் வைத்துக் கூறியுள்ளதால் சுட்டு உவமைக்கு சான்றாகும்.

**தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி**

**அஃதான் டவள் செய்தது**[15]

(தொல்.பொருள்.பொருளியல்,ப-329)

என்ற திருக்குறள் மூலம் இப்பூப்பறிப்போமாயின் வளைகழன்று தோள் மெலிய நடத்தல் வல்லியாதல் வேண்டும் என ஒரு பிறிதொரு பொருளை பொருட்படுத்தியதால் சுட்டுஉவமை ஆயிற்று.

**நகை உள்ளுறை**

வெளிப்படையாகக் கூறப்படும் பொருளின் உள்ளே கேலியும் கிண்டலுமான எள்ளல் சுவையுணர்வுடைய பொருளொன்றை விளங்கச் செய்வதை நகையுள்ளுறை எனக் கூறப்படுகிறது. இது ஊடல், வருத்தம் ஆகியவற்றைப் புலப் படுத்தும் வகையில் தோன்றும். மேலும் வெளிப் படையான பொருளுக்கு எதிரான உட்பொருளைக் கொண்டிருப்பதாய் திகழும் செய்தியினை,

**கல்லாக்கடுவன் நடுங்கமுள் எயிற்று**

**மடமா மந்தி மாணா வன்பறழ்**

**கோடுயர் அடுகத்து ஆடுமழைஒளிக்கும்**

**பெருங்கல் நாடனை அருளினை யாயின்**

**……. ஆன்றோர் செல்நெறி வழாச்**
**சான்றோன் ஆதல் நன்கு அறிந்தனை தெரிமே**[16]

(நற்-233)

என்ற நற்றிணைப்பாடலில் தலைவன் நீண்ட காலமாய் மணம்புரியாமல் காலம் தாழ்த்தாமல் தோழி சிறைப்புறமாகத் தலைவியிடம் "தலைவனிடம் நீ கொண்ட தீராக் காதலால் நான் கூறுவதைப் பொருட்படுத்த மாட்டாய் ஆயினும் நான் கூறுவந்த ஒன்றைக் கூறுவேன் என்று தலைவன் மிகவும் உயரிய பண்பு நலனுடைய சிறந்தோரின் அறநெறிப்படியே ஒழுகுபவன் என்பதை மட்டும் அறிந்து கொள்வாய்" என்று கூறுவதாய் இப்பாடல் அமைந்துள்ளது. ஆன்றோர் மேற்கொள்ளும் பலரறிய வரைதலும் களவிய கடிதலுமாகிய அறநெறியைத் தலைவன் தவறியவன் என்று உட்பொருளால் எள்ளி நகையாடுதலைக் காணமுடிகின்றது.

**அசையியற் குண்டாண்டோ ஏரஎர்யான் நோக்க**
**பசையினள் பைய நகும்** [17]

(தொல்.பொருள்.பொருளியல், ப-329)

என்ற திருக்குறளில் அவள் அசைந்து கொண்டிருந்தாள். அதில் ஓர் அழகு தெரிகிறது. நான் பார்த்தேன். அதில் அவள் ஒட்டிக் கொண்டாள். அத்துடன் மெல்ல சிரிக்கிறாள். இந்த வெளிப்படையான சொற்களில் வேறு பொருள் உணர்த்தப்படுகிறது. அவள் மெல்ல நடப்பதிலும் அவன் பார்ப்பதை அவள் விரும்புவதிலும் அவள் புன்னகையிலும் அவள் அவனை விரும்புகிறாள் என்னும் புதிய பொருள் உள்ளுறையாக இருப்பதால் இது உள்ளுறை உவமம். அவள் நகையில் ஏளனக் குறிப்பு தோன்றாமல் காதல் குறிப்பு தோன்றுவதால் நகை உள்ளுறை ஆகும்.

**சிறப்பு உள்ளுறை**

ஒன்றைச் சிறப்பித்து மிகுவித்து சொல்வதனால் பிறிதொரு பொருள் பயப்பச் செய்வதே சிறப்பு உள்ளுறையாகும்.[18] இது வெகுளி, அறியாமை, பொறாமை, வறுமை என்று நான்கு வகைப்படும். இதனை,

**சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு**
**அனைநால் வகையும் சிறப்பொடு வருமே**[19]

(தொல்.பொருள்.பொருளி, ப-48)

என்கிறது தொல்காப்பியம்

இவ்வகைப்பாட்டிற்கு சான்றாக,

**யாரை எலுவ யாரே நீயெமக்கு**
**யாரையும் அல்லை ரொதும லாளளை**
**அனைத்தாற் கொண்களம் இடையே நினைப்பின்**
**கடும்பகட்டு யானை நெடுந்தோர்க் குட்டுவன்**[20]

(நற்-395)

என்ற நற்றிணைப்பாடல் மூலம் தலைவன் வரைந்து கொள்ளாது களவுக் காலத்தை நீட்டித்தலால் தோன்றிய சினத்தின் பொருட்டுத் தலைவனை மிகவும் கடித்து யாரோ நீ? என்று கூறுவது போன்று உள்ளுறை அமைந்துள்ளது. இதனைச் சிறப்பு உள்ளுறையின் கீழ் அடக்கலாம். ஏனெனில் சினத்தின் மிகுதி காரணமாக இவ்வாறு கூறினாலும் அதன் மூலம் காதலின் சிறப்பே புலப்படுதலால் சிறப்பு உள்ளுறை ஆகும்.

**நுண் எழில் மாமைச் சுணங்கு அணி ஆகம்தம்**
**கண்ணொடு தொகுத்து என நோக்கியும்**
**அமையார் என்**
**ஒண் நுதல் நீவுதர் காதலர் மற்று அவர்**
**எண்ணுவது எவன் கொல் அறியேன்.**[21] (கலித்.4)

என்ற கலித்தொகை பாடலின் மூலம் தலைவன் என் நெற்றியோடு கூடிய முகத்தை எதற்காகத் தடவிக் கொடுக்கிறார் என்று தலைவி சொல்லும்போது அவள் தன்னை அணைக்க விரும்புகிறார் என்று சொல்வதாகப் பிறிதொரு பொருள் புலப்பட நின்றதால் இது சிறப்பு உள்ளுறை ஆகும்.

**ஆய்வு முடிவுரை**

தமிழ் இலக்கியங்களில் குறிப்புப் பொருள் முறையில் உள்ளுறை, இறைச்சி என்ற இரு பெரும்பிரிவுகளைக் கொண்டு பாடப்படும் பொழுது இலக்கியமானது எல்லையற்ற இன்பத்தை வழங்குவதை அறியப்படுகிறது. அவற்றில் நற்றிணைப் பாடலில் காணப்படும் உள்ளுறையின் வகைகள் மூலம் செய்யுளின் இன்பத்தையும் மிகுவிப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. சங்க கால மக்கள் தங்கள் மகிழ்ச்சியையும், மன வருத்தத்தையும் நேரடியாகக் கூறாமல் மறைமுக மாக கூற உள்ளுறை உவமையானது இலக்கியத் தின் பொருள் புலப்பாட்டு உத்திகளாகக் கையாண்டு உள்ளனர். நாகரிகத்தின் வெளிப்பாடு என்பதைவிட உச்சநிலை என்றே கொள்ளலாம் என்பதைத் தெளிவாக உணர முடிகிறது.

**துணைநூற்பட்டியல்**


1. இளம்பூரணர், தொல்காப்பியம் – பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை – 14, 18ஆம் பதிப்பு – 2022.
2. திரு.நாராயணசாமி ஐயர், நற்றிணை நானூறு மூலமும் உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 18, மறுபதிப்பு – 2017.
3. தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள், சோலை நூலகம், கோவை, பதிப்பு – 2004.
4. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம் பொருளதிகாரம் அமராவதிசாலை, திருச்சி – 621210, பதிப்பு – 2017.
5. நச்சினார்க்கினியர் (உ.ஆ) கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை, பதிப்பு – 2007.
6. மகாதேவன். கதிர், ஒப்பிலக்கிய நோக்கில் சங்க காலம், செல்லப்பா பதிப்பகம், மதுரை, பதிப்பு – 2009.